FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318765

1. District மாவட்டம் : Tirupathur PS: காவல்நிலையம் Vigilance & Anti Corruption Year: ஆண்டு 2026 FIR No. மு.த.அ. எண் 02/2026 Date: நாள் 05-06-26

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7(a) and 12 r/w 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 04/06/2026 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Before 15.30 Hrs Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05/06/2026 Time : நேரம் 16.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume I 05/06/2026 Time : நேரம் 16.30 Hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the Joint-1 Sub-Registrar, Tirupathur. 1.5 Km, South West.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. S. Nandhakumar
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Sivanandam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55 yrs
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Senior Revenue Inspector
(g) Address : முகவரி Inspection Cell office, Collectorate, Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) Tmt. S. Radhika, age 42, w/o Selvam, Sub-Registrar, Joint-1 Sub-Registrar office, Tirupathur, Tirupathur District.
(2) Tr. S. Kathiravan (43), S/o Siraji, IPC, Pernambut (Vi) & (Po), Vellore.
(3) Tr. S. Vijay (29), S/o Selvam, DEO, Joint-1 SRO, Tirupathur.
(4) Tmt. B. Deepakrishnapriya (30) w/o Abishek, Plot No 18, Door No. 246/5, Kullai Nagar Extn., Salem. (5). Tr. V. Vijaysh (24) S/o Vadivelu, Mechari (Vittam), Andiyappanur (Vi), Lellapattai (Po), Tirupathur (TK & Dt)

8. Reasons for delay in reporting by the complainant / informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 . Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

05/06/2026
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்
05/06/2026 @ 19.30 Hrs

Name: பெயர் B. GOWRI
Rank: நிலை Inspector of Police, Vigilance & Anti-Corruption, Tirupathur

இன்று 05.06.2026-ஆம் தேதி பகல் 16.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு. S. நந்தகுமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேலூர்-9, வேலூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: 05.06.2026 அனுப்புநர், திரு.S.நந்தகுமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர், ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. கைப்பேசி எண்.9488646949. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பத்தூர். ஐயா, நான் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கான ஆய்வுக்குழு அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.06.2026 ஆம் தேதி காலை 09.30 மணியளவில் நான் பணியில் இருந்தபோது திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு கிடைக்கப்பெற்ற நம்பகமான இரகசிய தகவலில் திருப்பத்தூர் மாவட்டம், 1 எண் இணை சார்பதிவாளர் திருப்பத்தூர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரியும் திருமதி.S.ராதிகா என்பவர் பத்திரப்பதிவுகளை மேற்கொள்ள டாக்குமெண்ட் ரைட்டர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து லஞ்சமாக பணத்தை வசூல் செய்வதாக வந்த தகவலினை காவல் ஆய்வாளர் என்னிடம் கூறியதன் பேரில் காலை சுமார் 11.30 மணிக்கு திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலத்திற்கு வந்தேன். பின்னர் 04.06.2026-ஆம் தேதி மதியம் 15.15 மணியளவில் நானும் திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.B.கௌரி மற்றும் காவல் குழுவினருடன் அரசு வாகனத்தில் புறப்பட்டு, திருப்பத்தூர் நகரம் ரெட்டைமலை சீனிவாசன் பேட்டையில் உள்ள 1 எண் இணை சார்பதிவாளர் திருப்பத்தூர் அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ள மதியம் 15.25 மணிக்கு சென்று, திருப்பத்தூர் இணை-1 சார்பதிவாளர் அலுவலகத்தை குழுவினருடன் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, பொது மக்கள் ஏராளமானோர் சார் பதிவாளர் அலுவலகத்திற்குள்ளேயும், அலுவலக வளாகத்திற்குள்ளேயும் காத்திருந்தனர். மேலும், குறிப்பிட்ட சில நபர்கள் அலுவலகத்திற்குள்ளே செல்வதும், மீண்டும் வெளியே வந்து பொது மக்களிடம் பேசிவிட்டு மீண்டும் அலுவலகத்திற்குள்ளே செல்வதுமாக இருந்தனர். மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து, கிடைக்கப்பெற்ற தகவலை மீண்டும் நான் தனிப்பட்ட முறையில் இரகசிய தகவலாளர்கள் மூலம் உறுதி செய்து கொண்டு மதியம் சுமார் 15.30 மணிக்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் தீடீர் சோதனை மேற்கொள்ள உள்ளே சென்று பார்த்தபோது, சார் பதிவாளர் ஹாலில் உள்ள அவரது இருக்கையில் அமர்ந்து வேலை செய்து கொண்டிருந்தார். அவரிடம் இருதுறை திடீர் சோதனைக்குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, நாங்கள் வந்த நோக்கத்தையும் தெரிவிக்கப்பட்டது. பின்னர், சார் பதிவாளரை விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.S.ராதிகா (42/2026) க/பெ செல்வம் என்றும், தான் கடந்த 14.08.2025 ஆம் தேதி முதல் இணை-1 சார் பதிவாளர் திருப்பத்தூர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும் சொன்னார்.

பின்னர், சார் பதிவாளர் திருமதி.S.ராதிகா அவர்களை விசாரிக்க அவரிடம் பணம் எதுவும் இல்லை. அலுவலர்களின் தனிநபர் தொகை கையிருப்பு பதிவேட்டை சோதனை செய்ய அதில் இன்றைய தேதியில் (04.06.2026) அவர் பெயர் எழுதப்பட்டு அதனருகில் கையிருப்பு ரூ.2,360/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அதனைப்பற்றி விசாரிக்க தான் வைத்திருந்த பணத்தை தன் கணவர் திரு.செல்வம் என்பவரிடம் காலை 10.30 மணிக்கு கதிரவன் மூலமாக கொடுத்து அனுப்பிவிட்டதாக கூறினார். ஆனால் அதனை தான் பதிவேட்டில் எதுவும் குறிப்பிடவில்லை என்றும் கூறினார்.
பின்னர், சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தனிநபர்களை சோதனை செய்த விவரம் பின்வருமாறு:- மேற்படி திருப்பத்தூர் இணை-1 சார்பதிவாளர் அலுவலகம் ஆனது தனியாருக்கு சொந்தமான கட்டிடத்தில் திருப்பத்தூர் நகரம், ரெட்டைமலை சீனிவாசன் பேட்டை நகரில் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. அலுவலக உதவியாளர் திருமதி.ரா.கனிமொழி (39/2026) க/பெ ராஜேந்திரன் என்பவரை விசாரிக்க அவரிடம் ரூ.1850/- இருந்தது. அதனை பற்றி விசாரிக்க அது தன்னுடைய சொந்தபணம் என்று கூறினார். தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டிலும் அதே தொகை குறிப்பிடப்பட்டிருந்தது. தக்க முகாந்திரம் கூறியதால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. சார்பதிவாளருக்கு அருகில் இருந்த திரு.கதிரவன், (43/2026) த/பெ சிவாஜி, IP Camera Operator அவர்களை விசாரிக்க அவரிடம் ரூ.710/- இருந்தது. அவரிடம் காலை அலுவலகத்திற்கு எவ்வளவு பணம் கொண்டு வந்தீர்கள் என்று கேட்க ரூ.1400/- கொண்டுவந்ததாகவும் அதில் தான் மதியம் மட்டன் பிரியாணி இரண்டு வாங்கியதாகவும் அதற்கு ரூ.340/- செலவானது என்றும் அதற்கான கடையில் ரூ.600 கொடுத்து சில்லறை வாங்காமல் வந்துவிட்டதாகவும் கூறினார். அப்போது தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பார்க்க ரூ.1700 என குறிப்பிடப்பட்டிருந்தது. அது பற்றி விசாரிக்க ரூ.1700 என குறிப்பிட்டு ரூ.710 மட்டும் வைத்திருந்ததற்கான சரியான முகாந்திரம் கூறாமல் முன்னுக்கு பின் முரணாக கூறினார். அவரை எங்கிருந்து வருகிறீர்கள் என்று விசாரிக்க தான் வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட்டு அருகிலிருந்து வருவதால் பஸ் சார்ஜ் வேண்டும் என்று கூறியதால் அவரிடமிருந்த பணத்தில் ரூ.110 அவரிடம் திருப்பி கொடுத்து மீதி ரூ. 600 (ரூ.500X1, ரூ.100X1) பணம் மட்டும் தக்க முகாந்திரம் கூறாததால் இது இலஞ்ச பணமாக இருக்கலாம் என்று கருதி விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. கணினி அறையில் இருந்த திரு.S.விஜய் (29/2026) த/பெ செல்வம், DEO அவர்களை விசாரிக்க அவரிடம் ரூ.1500/- (ரூ.500X1, ரூ.100X5) இருந்தது. தனிநபர் கையிருப்பு பதிவேட்டை பெற்று அதை பார்க்க அதில் ரூ.430/- என குறிப்பிடப்பட்டிருந்தது. அவரிடம் காரணம் கேட்க தக்க முகாந்திரம் கூறாததாலும் அவரிடம் பத்து ரூபாய் மற்றும் 20 ரூபாய் நோட்டுகள் இல்லாததாலும் தக்க முகாந்திரம் கூறாததாலும் இது இலஞ்ச பணமாக இருக்கலாம் என்று கருதி விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. ஹாலில் இருந்த தனிநபர் திருமதி.B.தீபகிருஷ்ணபிரியா (30/2026) க/பெ அபிஷேக், பிளாட் நெம்பர்-18, கதவு எண்.246/5 முல்லை நகர் விரிவு, சேலம் என்பவரை விசாரணை செய்ய அவருடைய பூப்போட்ட பிரௌவுன் கலர் ஹேண்பேக்கில் ரூ.2,30,000/- (இரண்டு இலட்சத்து முப்பதாயிரம்) (ரூ.500X400, ரூ.200X100, ரூ.100X100) இருந்தது. மற்றும் மற்றொரு ஜிப்பில் தனியாக ரூபாய் 200 இருந்தது. அது

பற்றி விசாரிக்க ரூ.200 தன் செலவிற்காக வைத்துள்ள பணம் என்றும் மற்ற பணம் ரூ.2,30,000/- தான் தன் அம்மா தீபா அவர்கள் மொத்தம் நான்கு மனைகள் விற்பனை செய்ய உள்ளதாகவும் அதில் மூன்று வெளிநபர்களுக்கும் நான்காவதாக தனது கணவருக்கும் கிரையம் செய்ய வந்ததாகவும் இதில் மற்ற மூன்று நபர்களின் ஆவணம் மட்டும் தயார் ஆகி சார்பதிவாளரிடம் பதிவிற்காக இருப்பதாகவும் தன்னுடைய கணவர் பெயரில் இன்னும் ஆவணம் தயார் ஆகவில்லை என்றும் கூறினார். தன்னிடமிருந்த பணம் மற்ற மூன்று வெளிநபர்கள் தன் அம்மாவிடம் சொத்தை வாங்கியதற்காக கொடுத்த பணம் என்று கூறினார். அவர் குறிப்பிட்ட பதிவு சம்மந்தமான ஆவணங்களை சார்பதிவாளரிடம் வாங்கி பார்க்க கிரையத்திற்குரிய பணமானது வங்கி பரிவர்த்தனை மூலம் கொடுக்கப்பட்டுள்ளதாக இருந்தது. இவர் கூறிய காரணம் முன்னுக்கு பின் முரணாக இருந்ததால் இந்த பணம் பதிவுக்காக சார்பாதிவாளருக்கு இலஞ்சமாக கொடுக்க வைத்திருக்கலாம் என்று நியாயமான சந்தேகம் உள்ளதால் இந்த பணமானது மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது தாயார் சம்மந்தமான ஆவணங்களின் நகல்களை சார்பதிவாளரிடம் கேட்க 1.திருமதி.ஆனந்தி அண்ணாமலை தற்காலிக எண்.TP/278791716/2026 2.திரு.ஜெயசீலன் தற்காலிக எண்.TP/277911754/2026 3.திருமதி.செந்தாமரை தற்காலிக எண்.TP/277911634/2026 ஆகியவற்றின் சான்றொப்பமிட்ட நகல்களை வழங்கினார். இந்த ஆவணமானது விசாரணையின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த ஆவணத்தில் கிரையம் பெறுபவர்கள் பற்றி விசாரிக்க அவர்கள் வரவில்லை என்று திருமதி.தீபகிருஷ்ணபிரியா கூறினார். மேலும் ஹாலில் இருந்த திரு.ஷபியுல்லா என்பவரிடம் (ரூ.27170), திரு.அனிஷ் அகமது என்பவரிடம் (ரூ.25140), திரு.காதர்பாஷா என்பவரிடம் (ரூ.19070) பணம் இருந்தது. இதுபற்றி விசாரிக்க தங்களுடைய சொந்தபணம் என்று கூறி தக்க முகாந்திரம் கூறியதால் அதனை விசாரித்து ஊர்ஜிதம் செய்து கொண்டு அவர்களிடம் வாக்குமூலம் எழுதி வாங்கிக்கொண்டு அந்த பணம் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் வராண்டாவில் இருந்த தனிநபர் திரு.விக்னேஷ் (26/2026) த/பெ வடிவேலு, மேச்சேரி வட்டம், ஆண்டியப்பனூர் கிராமம், லாலாபேட்டை அஞ்சல், திருப்பத்தூர் தாலுக்கா என்பவரை விசாரிக்க தான் இராணுவத்தில் பணிபுரிந்து வருவதாகவும் தற்போது விடுப்பில் வந்திருப்பதாகவும் தனது தந்தை வடிவேலு என்பவர் ஆவண எண். 1731/2002 மற்றும் 1732/2002 யின்படி சொத்துக்கள் வாங்கியிருப்பதாகவும் அதனை தன் பெயரிலும் தன் அண்ணன் திரு.ரங்கநாதன் பெயரிலும் என் அப்பாவிடமிருந்து தானசெட்டில்மெண்ட் ஆக பத்திரபதிவு செய்ய இருப்பதாகவும் ஏற்கனவே அப்பா கிரையம் வாங்கிய ஆவணங்களில் 1732/2002 என்ற கிரைய பத்திரமானது அப்பாவிடம் தற்போது இல்லை என்பதால் அந்த ஆவணம் இல்லாமல் எவ்வாறு பத்திரம் பதிவு செய்வது என்பது குறித்து விசாரித்து தெரிந்து கொள்ள பத்திரபதிவு அலுவலகத்திற்கு வந்ததாகவும் கூறினார். அவரை விசாரிக்க வைத்திருந்த கருப்பு நிற ஷோல்டர் பேக்கில் ரூ.91800/- இருந்தது. அந்த பணத்தை பற்றி கேட்டபோது அது தான் வீட்டில் சேர்த்து வைத்திருந்த பணம் என்றும் அதில் ரூ.1800/- அவரது சொந்த செலவிற்காகவும் மீதம் ரூ.90000/- தான் ஏற்கனவே சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு தன்னுடன் வேலை செய்யும் திரு.கருணாகரன் என்பவர் மூலமாக தன்னுடைய அவசர

தேவைக்காக வட்டிக்கு வாங்கிய ரூபாய் ஒரு இலட்சத்தில் ரூ.90000/- கருணாகரனிடம் திருப்பி கொடுப்பதற்காக கொண்டு வந்ததாகவும் தெரிவித்தார். அப்போது கருணாகரனுக்கு பணம் திருப்பி கொடுக்க செல்வது தெரியுமா என்று கேட்டபோது இன்று காலை சுமார் 09.00 மணியளவில் கருணாகரனிடம் செல்போனில் தன்னால் வட்டி கட்டமுடியவில்லை அதனால் பணத்தை திருப்பி தர இன்று வருவதாக சொல்லி இருப்பதாக கூறினார். அவரது செல்போனில் எப்போது பேசினார் என்பதை காட்ட சொன்னபோது தனது மனைவி கவியரசி செல்போன் நெம்பரிலிருந்து (6381896624) பேசியதாக தெரிவித்தார். அவர் சொன்ன விவரம் சரிதானா என்பதை தெரிந்து கொள்வதற்காக அவரது செல்போனிலிருந்து (9626273669) அவரது நண்பர் திரு.கருணாகரனுக்கு (9600594327) என்ற எண்ணிற்கு மாலை சுமார் 17.00 மணிக்கு பேசி விவரம் கேட்டபோது விக்னேஷ் இன்று தன்னிடம் பேசவில்லை என்றும் பணம் திருப்பி தருவது பற்றி எதுவும் கூறவில்லை என்றும் தெரிவித்தார். அவர் தான் வைத்திருந்த பணத்திற்கு சொன்ன காரணத்தை கருணாகரனிடம் கேட்டபோது விக்னேஷ் கூறியதற்கு மாறாகவும் முரண்பாடாகவும் கூறியதாலும் மேலும் தன்னிடம் இன்று பேசவில்லை என்றும் அவர் லீவில் சென்றதிலிருந்தே தன்னிடம் பேசவில்லை என்றும் கூறியதாலும் மேற்படி பணம் பத்திரபதிவு அலுவலகத்தில் பத்திரபதிவு செய்வதற்காக இலஞ்சமாக கொடுக்க கொண்டுவந்திருக்கலாம் என நியாயமான சந்தேகம் இருப்பதால் அவர் சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் ரூ.1800/-மட்டும் அவரிடம் திருப்பி கொடுத்துவிட்டு மீதி பணம் ரூ.90000/- மட்டும் (ரூ.500X90, ரூ.200X50, ரூ.100X350) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்திலிருந்த தனிநபர்களிடம் விசாரணை செய்ய திரு.ஷபியுல்லா த/பெ சையது ஆதம் என்பரிடம் ரூ.27170, திரு.அனிஷ்அகமது த/பெ சையது ஆதம் என்பவரிடம் ரூ.25140, திரு.தினேஷ்குமார் த/பெ கோவிந்தன் என்பவரிடம் ரூ.4070, திரு.முருகன் த/பெ அப்பாதுரை என்பவரிடம் ரூ.170, திரு.திருமலைவாசன் த/பெ முருகன் என்பவரிடம் ரூ.160, திரு.வைரவன் த/பெ மாரியப்பன் என்பவரிடம் ரூ.1710, திரு.குமரேசன் த/பெ இராமமூர்த்தி என்பவரிடம் ரூ.5215, திரு.செல்வராஜ் த/பெ சின்னராஜ் என்பவரிடம் ரூ.50, திருமதி.சசிசங்கீரா க/பெ அஜய் என்பவரிடத்தில் ரூ.1850, திரு.காதர்பாஷா த/பெ ஜலாலுதீன் என்பவரிடம் ரூ.19070, திரு.மணிகண்டன் த/பெ பரமசிவம் என்பவரிடத்தில் ரூ.3850, திரு.ஜெயசங்கர் த/பெ கோவிந்தசாமி என்பவரிடம் ரூ.470 திரு.சிலம்பரசன் த/பெ பலராமன் என்பவரிடம் ரூ.20 இருந்தது. மேற்படி தனிநபர்கள் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியதாலும் அதனை சரிபார்த்து அது ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அந்த பணம் அவர்களிடமே கொடுக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் சில தனிநபர்கள் இருந்தார்கள் அவர்களிடம் பணம் ஏதுமில்லை. பின்னர் பதிவாளர் அலுவலக பணியாளர்களின் தனி நபர் பணம் இருப்பு பதிவேடு பார்வையிட அது 1 முதல் 51 பக்கங்கள் இருந்தது. அதில் பக்கம் 01 முதல் 32 வரை பதிவுகள் இருந்தது. தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டின் 01 மற்றும் 32-வது பக்கத்தில் நானும், காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்து விசாரணையின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. திருமதி.ராதிகா, சார் பதிவாளர் அவர்களிடம் 04.06.2026-ஆம் தேதி அலுவலகத்தில் இது வரை எத்தனை ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்தான

பதிவுகள் பற்றிய விவரத்தை சார் பதிவாளர் அவர்களிடம் கேட்க, அவர் அன்று மாலை வரை பதிவு செய்த ஆவணங்களின் பதிவினை star 2.0 என்ற மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்ட "A" Account கணக்கை பிரிண்ட் அவுட் எடுத்து தர கோரியதில் அதனை கணினியில் இருந்து பதிவு எடுத்து கொடுத்தார். அது மூன்று தாள்கள் இருந்தது. அதனை சார் பதிவாளர் திருமதி.ராதிகா அவர்களின் சான்றொப்பமிட்டு கொடுத்தார். இந்த சான்றொப்பமிடப்பட்ட நகல் விசாரணைக்காக பெறப்பட்டது. பின்னர், சார் பதிவாளரிடம் அலுவலக ஊழியர்கள் வருகைப்பதிவேடு பற்றி கேட்க, அவர் வருகைப் பதிவேட்டை ஆஜர் செய்ய, அதை பார்வையிட அது 1 முதல் 49 பக்கங்கள் கொண்ட வருகை பதிவேட்டில் 10 வது பக்கத்தில் 04.06.2026 ஆம் நாளுக்கான வருகை பதிவு இருந்தது. இந்த பதிவேட்டின் முதல் மற்றும் 10 வது பக்கத்தில் நானும், காவல் ஆய்வாளர் கையொப்பமிட்டு ஒளிநகல் எடுத்து அதில் சார் பதிவாளர் திருமதி.ராதிகா அவர்களின் சுருக்கொப்பம் பெற்று சான்றொப்பமிடப்பட்ட நகல் விசாரணைக்காக பெறப்பட்டது. பின்னர், IPCO மற்றும் DEO பணியாளர் வருகை பதிவேட்டை பார்வையிட அதில் பக்க எண் எதுவும் குறிப்பிடவில்லை. அதில் 04.06.2026 ஆம் நாளுக்கான பதிவிற்கு கீழே நானும், காவல் ஆய்வாளர் ஆகியோர் கையொப்பம் செய்து ஒளிநகல் எடுத்து சார்பதிவாளரிடம் சான்றொப்பமிடப்பட்ட நகல் விசாரணைக்காக பெறப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் அலுவலக பார்வையாளர் பதிவேடை பார்வையிட அதில் 04.06.2026 ஆம்தேதி வரை பதிவுகள் காணப்பட்டன. ஆனால் 04.06.2026 ஆம் தேதி என்பதற்கு பதிலாக தவறுதலாக 04.05.2026 என தேதி குறிக்கப்பட்டிருந்தது. அதுபற்றி சார்பதிவாளரிடம் கேட்க எழுத்துப்பிழை ஏற்பட்டுள்ளதாகவும் இது 04.06.2026 ஆம் தேதிக்கான விவரம் தான் என்றும் கூறினார். அன்றைய தேதியில் மொத்தம் 20 நபர்கள் இப்பபதிவேட்டில் கையொப்பமிட்டு தாங்கள் கொண்டு வந்துள்ள பணத்தின் விவரத்தை குறிப்பிட்டிருந்தனர். இது குறித்து சார்பதிவாளரிடம் கேட்டபோது பொதுமக்கள் உள்ளே வரும்போது அவர்களுக்கு அந்த பதிவேட்டில் அலுவலகத்திற்குள் வரும் பொதுமக்கள் அவர்கள் பெயர், வைத்திருக்கும் தொகை மற்றும் செல்போன் நெம்பர்களை எழுதிவிட்டு வருமாறு அறிவுறுத்தி வருவதாகவும் தெரிவித்தார். இந்த பதிவேட்டில் நானும், காவல் ஆய்வாளரும் கையொப்பமிட்டு மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை திடீர் சோதனையில் தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் மற்றும் இலஞ்சம் கொடுக்க எடுத்து வந்திருக்கலாம் என்று நியாயமாக சந்தேகிக்ககூடிய பணம் என மொத்தம் ரூ.3,22,100/- மற்றும் ஆவணங்களும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமான முழு விபரங்கள் அனைத்தும் எனது நடவடிக்கைகள் 04.06.2026 யின்படி மாலை 15.30 மணிமுதல் இரவு 22.30 மணிவரை திடீர் கூட்டு சோதனை ஆய்வு நடவடிக்கை குறிப்பு தயார் செய்யப்பட்டது. இந்த திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.3,22,100/- மற்றும் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட அசல், நகல் ஆவணங்கள், அலுவலத்தில் தனிநபர்களான தீபகிருஷ்ணபிரியா, விக்னேஷ் இருவரும் எழுதி கொடுத்த விளக்க கடிதம், திடீர் கூட்டு சோதனை ஆய்வு நடவடிக்கை குறிப்பு ஆகியவற்றை இத்துடன் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கின்றேன். சார்பதிவாளர் திருமதி.ராதிகா பத்திரபதிவு செய்து முடிப்பதற்காக தனிநபர்களிடம் இலஞ்சமாக பணம்

பெற இருந்ததாலும் சார்பதிவாளர் அலுவலக ஊழியர்கள் திரு.கதிரவன், திரு.விஜய் ஆகியோர் லஞ்ச பணம் வைத்திருந்ததாலும் மற்றும் லஞ்ச பணத்தினை சார்பதிவாளர் ராதிகா அவர்களுக்கு கொடுத்து பத்திரபதிவினை முடித்துக் கொள்ள வந்திருந்த தனிநபர்களான திருமதி.தீபகிருஷ்ணபிரியா மற்றும் திரு.விக்னேஷ் ஆகிய நபர்கள் மீது உரிய சட்டநடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (XXX) (S.Nandakumar) 05.06.2026 மு.வ.ஆ., O/o.மா.ஆ.கு.அ., வேலூர்.

Sir,

Received the complaint on 05.06.2026 at 16.00 hrs, after getting oral permission from the DVAC, Chennai, I am registering a case in Tirupathur V&AC Cr.No. 02/2026 u/s 7(a) and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended by the PC (Amendment) Act, 2018 on 05.06.2026 at 16.30 hrs (sd xxxx), 05.06.2026 (B.Gowri), Inspector of Police, Vigilance and Anti-Corruption, Tirupathur.

The Original First Information Report along with the original typed complaint of Tr.S.Nandakumar, dated 05.06.2026 and original Joint Surprise Check Proceedings dated 04.06.2026 and two original explanation letters given by A4, A5 is submitted to the Hon'ble District and Session Judge cum Special Judge, Tirupathur and copy of the First Information Report is sent to the officers concerned.

05/06/2026
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Tirupathur